**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 243/2022 |
| Prosecution Witness | : | அ.சா.3 |
| Name | : | திவ்யா |
| Father's / Husband Name | : | ஜெயவேல் |
| Address | : | பெரம்பலூர் |
| Age | : | 33/2025 |

**தேதி : 16.04.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது. எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது பெரம்பலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் உள்ள குழந்தைகள் உதவி மையத்தில் ஒருங்கிணைப்பாளராக பணி செய்துவருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 07.06.2020 அன்று காலை 11.00 மணி அளவில் 1098 என்ற Child Line எண்ணிற்கு இரண்டு சிறுவர்களை கொத்தடிமைகளாக வைத்திருப்பதாக தகவல் வந்தது. நானும், Team Member பட்டு, சத்தியராஜ் ஆகிய மூன்று பேரும் காலை 11.30மணிக்கு எங்களுடைய அலுவகத்திலிருந்து புறப்பட்டு சத்திரமனைக்கும், பொம்மனப்பாடி கிராமத்திற்கும் இடையே உள்ள ஒரு காட்டிற்கு சென்று பார்க்கும்போது அங்கு இரண்டு சிறுவர்கள் ஆடு மேய்த்துக்கொண்டிருந்தார்கள். பக்கத்தில் பெரியவர்களும் ஆடு மேய்த்துக்கொண்டிருந்தார்கள். அந்த இடத்தின் சர்வே நம்பர் 152/16 ஆகும். மதியம் வரை அந்த இடத்தில் சிறுவர்கள் ஆடு மேய்த்ததை பார்த்துக்கொண்டிருந்தோம்.

வேறு யாரும்அவர்களுக்காக ஆடு மேய்க்க வருவார்களா என்று பார்த்தபோது யாரும் வரவில்லை, சிறுவர்கள்தான் ஆடு மேய்த்துக்கொண்டிருந்தார்கள். அதை என்னுடன் வந்த சத்தியராஜ் என்பவர் செல்போனில் படம் பிடித்தார். மதியத்திற்கு மேல் நாங்கள் அங்கிலிருந்து புறப்பட்டு கோட்டாட்சியர் அலுவலகத்திற்கு வந்து கோட்டாட்சியரிடம் தகவல் சொன்னோம். பிறகு மறுநாள் மாலை 4.00 மணிக்கு கோட்டாட்சியர், வட்டாட்சியர், குழந்தைகள் நல கமிஷ்னர், காவல் ஆய்வாளர், வி.ஏ.ஓ., ஆகியோருடன் நானும், சத்தியராஜ், பட்டு, முகமது உசைன் சேர்ந்து சத்திரமனை பொம்மனப்பாடி இடையே உள்ள அந்த காட்டிற்கு சென்றோம். எங்களை பார்த்ததும் ஆடு மேய்த்துக்கொண்டிருந்த இரண்டு சிறுவர்களும் ஓட முயற்சித்தனர். இரண்டு சிறுவர்களையும் அழைத்து விசாரித்தபோது ஒருவர் பெயர் முருகன், வயது 13, இராமநாதபுரத்தை சேர்ந்தவர் என்றும், மற்றொரு சிறுவனின் பெயர் மதியழகன், வயது 10, திருச்சி கருடாமங்களம் என்றும் சொன்னார்கள். முருகன் என்ற சிறுவனை விசாரித்தபோது தன்னை கண்ணன் என்பவர் தன்னுடைய பெற்றோரிடம் ரூ. 60,000/- கொடுத்து தன்னை அழைத்துவந்ததாகவும், இரண்டு வருடமாக இங்கு ஆடு மேய்த்துக்கொண்டிருப்பதாகவும் சொன்னார். மற்றொரு சிறுவன் மதியழகன் அழுதுகொண்டிருந்தான். எதுவும் சொல்லவில்லை.

பிறகு மேற்படி இரண்டு சிறுவர்களையும் மீட்டு அழைத்துக்கொண்டு வந்து Child Welfare Committee யிடம் ஒப்படைத்தோம். முருகனின் பெற்றோர்களுக்கு தகவல் கொடுத்து அவர்களை வரவழைத்து ஒப்படைத்துவிட்டோம். மதியழகனின் பெற்றோர் அன்றைய தினமே வந்து சிறுவனை அழைத்துக்கொண்டு சென்றனர். கண்ணன் என்பவரை அழைத்து Child Welfare Committee யில் விசாரணை செய்தார்கள். இது சம்மந்தமாக பொம்மனப்பாடி வி.ஏ.ஓ. சசிகலா என்பவர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

Child Line எண்ணிலிருந்து போன் வந்த விவரத்தை போலீஸார் என்னை விசாரித்தபோது சொன்னேன். காலை 11.00மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்றோம். 07.06.2020 அன்று சம்பவ இடத்திற்கு நானும், திவ்யா, பட்டு, சத்தியராஜ் ஆகியோர்கள் சென்றோம். 08.06.2020ம் தேதி அன்று மாலை 4.00மணிக்கு கோட்டாட்சியர், வட்டாட்சியர், Child Labour Commissioner, Child Labour Inspector, VAO, ஆகியோர்கள் சென்றோம். பட்டு என்பவர் ஏற்கெனவே சம்பவ இடத்தில் இருந்தார். கோட்டாட்சியர், வட்டாட்சியர், Child Labour Commissioner, Child Labour Inspector ஆகியோர்கள் நான்கு வாகனத்தில் சென்றோம். மேற்படி விவரத்தை போலீஸார் என்னை விசாரித்தபோது சொன்னேன். சம்பவ இடத்திலிருந்து 5.00 மணி முதல் 5.15 மணிக்கு கிளம்பிவிட்டோம்.

சிறுவர்கள் மேய்த்த ஆடு வெள்ளை ஆடா, செம்மறி ஆடா என்றால் செம்மறி ஆடு. சம்பவ இடத்திற்கு அருகே வயல் இருந்ததா என்றால் இருந்தது. சம்பவ இடத்திற்கு அருகே வீடு, குடிசைகள் இருந்ததா என்றால் இல்லை. போலீஸார் என்னை 08.06.2020 அன்று இரவு விசாரித்தார்கள், நேரம் தெரியவில்லை. 08.06.2020க்கு பிறகு போலீஸார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், சிறுவர்கள் எதிரியின் ஆட்டை மேய்க்கவில்லை என்றாலும், எங்களுடைய அலுவலகத்தில் தயாரிக்கப்பட்ட பொய் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.